ஊட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவுசெய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 02 வியாழக்கிழமை (16 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 200

மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

# தமது கட்சி ஆட்சிக்கு வந்ததும் சந்திரிகா புலிகளுடன் நிபந்தனையின்றி பேசுவார்!

## பி.பி.சி. சிங்கள செய்தியாளர் மூலம் அவரே அனுப்பியிருக்கும் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

அடுத்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தமது கட்சி வெற்றியீட்டியதும் சந்திரிகா குமாரணதுங்க விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேசுவாராம்.

யாழ்ப்பாணம் வந்திருக்கும் பி. பி. ஸியின் சிங்கள சேவையின் பொறுப்பாளர் மூலம் அவரே இத்தகவலை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

பி. பி. ஸியின் சிங்கள சேவையான 'சந்தேஸய'வில் பணியாற்றும் பொறுப்பான திரு. மதியாபரணம் வசந்தராஜா தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவரது தந்தையார் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். தாயார் சிங்களப் பெண். திரு. வசந்தராஜாவினால் பேச்சுத் தமிழைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் தமிழ் பேச வராது.

அவர் யாழ்ப்பாணம் புறப்படுவதற்கு முன்னர் மேல் மாகாணசபை முதலமைச்சரும் ஸ்ரீ. ல. சு. கவின் முக்கிய பிரமுகருமான சந்திரிகா குமாரணதுங்கவை சந்தித்தார். அந்தச் சந்திப்புக் குறித்து திரு. வசந்தராஜா தெரிவித்ததாவது:-

நான் சந்திரிகாவை அவரது அலுவலகத்தில் சந்தித்த போது அவருடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரான டி. எம். ஜயரத்னவும் உடனிருந்தார்.

"நான் யாழ்ப்பாணம் செல்லவிருக்கிறேன். விடுதலைப் புலிகளிடம் என்ன கூற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை விசேட படகுச் சேவை

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

நாளை விசேட சேவையும் சனிக்கிழமை வழமையான சேவையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (அ)

## கொடிகள், பதாகைகள் எரிப்பு:
## வீதியின் குறுக்கே படுத்து எதிரணி எம்.பி. மறியல்!

வீதிகளில் கட்டப்பட்டிருந்த சுதந்திரக்கட்சியின் நீலக்கொடிகளையும், பதாகைகளையும் பொலீஸார் அறுத்து எறிவதைத்தடுக்குமுகமாக பொலநறுவை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. மைத்திரிபால சிறிசேன வீதிக்குக் குறுக்கே படுத்து மூன்று மணித்தியாலங்கள் மறியல் செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது:

பொலீஸார் வந்த "ட்ரக்" முன் அவர் படுத்து மறியல் செய்தார் என்றும் —

பொலீஸார் "ட்ரக்" கை செலுத்த முயற்சித்த போது "ட்ரக்" கின் டயர் ஒன்றின் அருகே எம்.பி. தனது கழுத்தை வைத்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உடனே பொலீஸார் "ட்ரக்" கை பின்னுக்குத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூருக்கு அனுராவை அழைத்தார் சிறிமா!
### பல மணி நேரம் உரையாடல்

கொழும்பு, ஜூன் 16

எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு கடந்த திங்கட்கிழமை சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் எலிஸபத் மருத்துவமனையில் காலில் அறுவைச்சிகிச்சை நடந்தபோது, அனுரா பண்டாரநாயக்கா கூட இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் இருந்து சிறிமாவோ தொலைபேசி மூலம் அனுராவை அங்கு வரும்படி அழைத்தார் என்றும் —

அதனைத் தொடர்ந்தே அனுரா அங்கு சென்றார் என்றும் —

தாயும் மகனும் பலமணித்தியாலங்களாக மிக நெருக்கமாகப் பேசினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகாவும் சிங்கப்பூர் செல்ல ஏற்பாடு செய்ததாகவும் ஆனால் அரசியல் காரணங்களுக்காக கொழும்பில் தங்கியிருக்கும்படி அவருக்கு சிறிமாவோ ஆலோசனை கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-3)

## மணலாற்றில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 15

மணலாற்றில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் மற்றொருவர் காயமடைந்தார் என்றும் ஸ்ரீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு அரண் ஒன்றின் மீதே தாக்குதல் நடத்த முன் புலிகள் கிளைமோர் கண்ணிவெடியை வெடிக்க வைத்தனர் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தாக்குதலில் பலியான சிப்பாய் டபிள்யூ. ஏ. பிரேமசிறி என்றும், காயமடைந்தவர் டபிள்யூ. கே. சரான்ஜித் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அரசியல் தீர்வு காணப்படும் வரை
# ஜனாதிபதித்தேர்தலை இங்கு நடத்த புலிகள் அனுமதிக்க மாட்டார்கள்!
### ஆனால நிபந்தனையின்றி பேசலாம் என அறிவிப்பு

லண்டன், ஜூன் 16

தற்போது நடக்கும் யுத்தத்துக்கு பூரண அரசியல் தீர்வு காணப்படும் வரை எந்தத் தேர்தலையும் விடுதலைப் புலிகள் எதிர்ப்பார்கள். ஜனாதிபதித் தேர்தலை வடபகுதியில் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கமாட்டார்கள்.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் தரப்பால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆலி மற்றும் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளர் பைஸல் சமத் ஆகியோருக்கு வழங்கிய பேட்டியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இத்தகவலை வெளியிட்டதாக அறிவிக்கப்பட்டது.

## பேச்சு நடத்த அரச தரப்பு தொடர்ந்து 4 நிபந்தனைகள்

லண்டன், ஜூன் 16

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு தமது தரப்பில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது:

நிபந்தனையின்றிப் பேச தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருப்பது குறித்து —

அரசுத்தரப்புப் பதில் என்ன என்று லண்டனில் உள்ள ஸ்ரீலங்கா தூதரக அதிகாரி இவான்ஸ் கூரேயிடம் பி.பி.ஸி சிங்கள சேவையிலிருந்து கேட்கப்பட்டது.

அப்போதே அரசின் நிபந்தனைகள் பற்றி இவான்ஸ்

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசமைப்புப்படி ஜனாதிபதித் தேர்தல் நாடு முழுவதிலும் ஒரே நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதால் —

விடுதலைப் புலிகளின் தற்போதைய அறிவிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது என செய்தி ஏஜென்ஸிகள் சுட்டிக்காட்டின.

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல் பட்டியலில் சந்திரிகா பெயர் உள்ளதா?
### நேரில் விசாரித்து வருமாறு அவரே கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 16

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பட்டியலில் எனது பெயர் முன்வரிசையில் இருப்பதாக அரசின் இரகசியப் புலனாய்வுப் பிரிவினர் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இது உண்மையா என்பதை அவர்களிடம் (புலிகளிடம்) நேரில் விசாரியுங்கள். இல்லை என்றால் அதனை பகிரங்கமாக அறிவிக்கும்படி அவர்களிடம் கூறுங்கள்.

— இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கும் பி. பி. ஸியின் சிங்கள சேவைப் பொறுப்பாளர் வசந்தராஜாவிடம், அவர் கொழும்பிலிருந்து புறப்பட முன்னர் சந்திரிகா குமாரணதுங்க கோரினாராம்.

புலிகளினால் ஆபத்து ஏற்படலாம் என்று சந்திரிகாவை எச்சரித்துள்ள அரசு, அதனைக் காரணம் காட்டி சந்திரிகாவைச் சூழ பாதுகாப்புப் படை ஒன்றை நிறுத்தி வைத்திருக்கிறது.

தனது இரகசிய முகவர்களை சந்திரிகாவின் பாதுகாப்புப் பிரிவில் இடம்பெற வைத்ததன் மூலம் —

சந்திரிகாவின் நடவடிக்கைகள், அவரது திட்டங்கள், உத்திகள், அவருடன் தொடர்புடையவர்கள் என சந்திரிகாவுடன் தொடர்புடைய சகல விடயங்களையும் அரசு அறிந்து கொள்கிறது.

இதனை முறியடிக்கவே மேற்படி கோரிக்கையை சந்திரிகா என்னிடம் விடுத்தார்:

விடுதலைப் புலிகளினால் சந்திரிகாவுக்கு ஆபத்து இருக்கிறது என்று பிரசாரம் செய்வதின் மூலம் —

எதிர்காலத்தில் அரசியலில் தமக்கு போட்டியாக வரக்கூடிய சந்திரிகாவை — லலித் அத்துலத் முதலி, பிரேமதாஸா, ஆகியோர் போன்று — அரசியலில் இருந்து அகற்றவும், அந்தப் பழியை புலிகள் மேல் போடவும் சில தரப்பினர் திட்டமிட்டிருக்கக் கூடும்.

எனவே இது குறித்து புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவது நல்லது — இவ்வாறு திரு. வசந்தராஜா தெரிவித்தார். (உ-3)

## குடாநாடெங்கும் நேற்று முழு அளவில் துக்க தினம்

பேராசிரியர் துரைராசாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக, குடாநாடெங்கும் நேற்று பூரண துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், பொதுச்சந்தைகள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அரச, தனியார் அலுவலகங்கள் இயங்கவில்லை.

போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் நகரப் புறங்களில் மக்கள் நடமாட்டம்குறைந்து காணப்பட்டது.

குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வீதிகள், வீடுகள், முக்கிய சந்திகள், வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் பெரிய அளவிலான கறுப்புக் கொடிகளைத் தொங்கவிட்டு மக்கள் தமது கவலையைத் தெரிவித்தனர். (அ-3-173-162-17)

## மக்கள் அலை கவலை தாளாது கதறி அழ பேராசான் பூதவுடல் தீயுடன் சங்கமம்

வதிரி, ஜூன் 16

மிகச் சிறந்த நாட்டுப் பற்றாளரும், அறிஞரும், கல்விமானுமாகிய, யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசான் துரைராசாவின் புகழுடலை —

நேற்று நண்பகல் சுமார் ஒன்றேகால் மணிக்கு தீச்சுவாலைகள் வாய் விரித்து விழுங்கிய போது —

அங்கு சோகமே வடிவமாகத் திரண்டு நின்ற ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் சிந்தி, கதறி அழுது வெதும்பினர்!

வதிரி ஆலங்கட்டை பொது மயானத்தில் சோகமே உருவெடுத்து அலைமோதிய மக்கள் கூட்டத்தினர் பேராசானின் சிதைக்கு அவரது மூத்த மகன் அரவிந்தன் தீமூட்டிய போது தங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் பலரும் பலவிதமாக இரங்கலுரைத்து விம்மி விம்மி அழுத காட்சி இதயத்தை வெடிக்க வைத்தது.

வதிரி இரும்பு மதவடியில் உள்ள பேராசிரியரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் பூதவுடல் நேற்று நண்பகல் 11.55 மணிக்கு அங்கிருந்து மயானத்துக்கு இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இதற்கு முன்னர் மு.ப. 9 மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகின. பேராசிரியரின் மைந்தர்களான செல்வன் அரவிந்தனும், செல்வன் அழகேசனும் தமது தந்தையாருக்குரிய இறுதிக் கிரியைகளைச்

(3ஆம் பக்கம் பார்க்க)

### தலைவர் பிரபாவுடன் நெருக்கமாகப் பழகி

## தமிழீழப் போராட்டத்துக்கு தூணாக நின்றவர் துரைராசா
### இரங்கலுரையில் அன்ரன் பாலசிங்கம்

வதிரி, ஜூன் 16

பேராசிரியர் துரைராசா தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுடன் மிக நெருக்கமாகப் பழகினார். தமிழீழப் போராட்டத்துக்கு அவர் தூணாக நின்று முண்டு கொடுத்தார்.

தேசிய இனமான தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் ... வாழவேண்டும் என்பதே அவ... இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம்.

பேராசிரியரின் இல்லத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அன்ரன் பாலசிங்கம் ... கூறியதாவது:-

உன்னதமான மனிதர் இன்று உறங்கிக் கொண்டிருக்கிறார்; அவர் உயர்ந்த மலை போன்ற மனிதர்; அவரின் ஆழமான திறமைகளை கூறுவது கடினம்.

இங்கு பேசிய பலரும் பேராசிரியர் பற்றி பல கோணங்களில் பல பரிமாணங்களை எடுத்துக்கூறினார்கள்.

பேராசிரியரின் இன்னொரு பரிமாணம் இருக்கிறது. அது அவரது அரசியல் பரிமாணம்.

விடுதலைப் போராட்டத்தில் அவர் பார்வையாளராக நிற்கவில்லை. தனது அறிவுக்

(3ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மீது ஷெல் தாக்குதல்:
## அகதிகள் காயமுற்ற விடயம் ஜெனிவாவுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் மீன் சந்தைப் பகுதி மீது மண்டைதீவு இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் தமிழகத்தில் இருந்து அண்மையில் தாயகம் திரும்பிய இரண்டு ஈழ அகதிகளும் காயமடைந்தனர். இவ்விடயத்தை அரசின் கவனத்துக்குக் கொண்டுவர அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழகத்தில் இருந்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்ட அகதிகளில் பெரும்பாலானவர்கள் குருநகர் பகுதியில் வசிக்கின்றனர்.

இவர்களில் இருவர் காயமடைந்த விடயம் குறித்து கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் தனது ஜெனிவாவில் உள்ள தலைமையகத்துக்கு தகவல் கொடுத்துள்ளதாகவும் —

ஜெனிவா தலைமையகத்தின் தீர்மானப்படி இலங்கை அரசுக்கு கொழும்பு அலுவலகம் அழுத்தம் கொடுத்து, குருநகர் பகுதி மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று கோரவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — தமிழகத்தில் இருந்து திரும்பிய ஒருவர் கடந்த பெப்ரவரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் குருநகர் பகுதி கடலில் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. (ஓ-3)

### மூச்சந்தி முரளி



தகப்பன் வழியிலை மகனும் பேச்சு நடத்... வாம்......! ... நடந்தா சரி பாருங்கோ......!

## இடைநிறுத்த உத்தரவு

கொழும்பு, ஜூன் 16

கொழும்பு மாநகர மேயர் பதவியில் இருந்து ரட்ணசிறி ராஜபக்ஷாவை பதவி நீக்கம் செய்த மேல்மாகாண உள்ளூராட்சி அமைச்சர் விடுத்த உத்தரவை இடைநிறுத்தி வைக்கும்படி உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மேயரின் பதவி நீக்க அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரிப்பதை தவிர்த்துக் கொள்ளும்படி மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சர் ரதன சிறி விக்கிரமநாயக்காவுக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. (ஓ-எ-6)

## அதிரடிப்படை சிப்பாயும் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 16

மட்டக்களப்பு, அக்கரைப்பற்று—காஞ்சிரங்குடா பகுதியில் கடந்த வியாழக்கிழமை பொலீஸ் அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் —

அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சரசாலை வடக்கில் அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வீடு கட்டக்கூடிய நான்கு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: க. நடராசா, ஐயனார் வீதி, சரசாலை வடக்கு அல்லது இ. சிவானந்தம், நகரசபை பொது நூலகம், சாவகச்சேரி. (சி-8479)

## தேவை

கொம்போசிட்டர், பைண்டர் தேவை. நேரில் வரவும். இல. 23, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (7449)

குரக்கன், சோயா தேவை. வைத்திருப்பவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும். அண்ணா பாம் இனுவில். (இ-8284)

## இலகு திருமண சேவை

31 வயது, மிருகசீரிடம், உதயச் செவ்வாய், சுவிஸில் தொழில்புரிபவருக்கு மணமகள் சுவிஸில் தேவை. விரும்பிய மணமக்கள் தெரிவிற்கு நாடுங்கள். தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா யாழ். நாச்சிமார் கோயிலடி. (31389)

## மனைப்பொருளியல்

ஆண்டு-7 தொடக்கம் 10 வரை பாடத்திட்டத்துக்கு அமைந்தது. ஆக்கம்: ஆர். ஆயு விலை 85/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் பொத்தக நிலையம், யாழ்ப்பாணம். (இ-8270)

## இனாம்

மில்க்வைற் தொழிலகத்தில் 450 கிறாம் சவர்க்காரப்பவுடர் பெட்டி ஒன்று வாங்குபவர்களுக்கு நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் வர்ணப்படம் அன்பளிப்பாக வழங்கப்படும். இச்சலுகை 23-6-94 வரை மட்டுமே. "மில்க்வைற்" (இ-8504)

## அரசாங்க பரீட்சை

அரசாங்க சேவைகளுக்கான பரீட்சைக்கு Spoken English with Grammar and Literature உடன் முழுமையான பயிற்சி அளிக்கப்படுகின்றது. நேரங்கள் தேவையானபடி தரப்படும். விரிவுரையாளர்: V. N. Kandasamy, இல. 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்கு சமீபமாக) கொக்குவில். (31434)

## கிளிநொச்சியில் சீதன ஒழிப்பு வீதி நாடகம்

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சியில் சீதன ஒழிப்பு பிரசார வீதி நாடகங்கள் நகர, கிராமப் பகுதிகள் எங்கும் நடைபெற்று வருகின்றன.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் ஆதரவுடன் வன்னி மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகத்தினர் இவற்றை நடத்தி வருகின்றனர். (இ-76)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகம், யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவுடன் நடத்தும் தச்சிச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தில் ஆரம்பமாகின்றது. இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழகம் வி. க. "ஏ" அணி எதிர் சாந்தை விநாயகர் வி. க. "ஏ" அணி

★ சித்தி விநாயகர் வி. க. அணி எதிர் தர்க்கா வி. க. அணி (உ-20)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் "உதயன்" கிண்ணத்துக்காக கழக மைதானத்தில் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் நடத்தி வரும் — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டங்கள் இன்றும் நாளையும் மாலையில் நடைபெறவுள்ளன. பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

இன்று

★ 4.00:-மணி அலவெட்டி விநாயகர் அணி எதிர் கண்ணகி "ஏ" அணி

★ 4.45 மணி:- யங் ஹென்றீஸ் அணி எதிர் ஞானமுருகன் அணி

நாளை

★ 4,00 மணி:- யாழ் பல்கலைக்கழக "ஏ" அணி எதிர் சென். அன்ரனீஸ் "ஏ" அணி

★ 4.45 மணி ஆதிசக்தி "ஏ" அணி எதிர் கலட்டி வி. க; அணி.

... டத்தால் நடத்தப்பட்டுவரும் வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டிகள் இன்று 16ஆம் திகதி வியாழக்கிழமை சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் உடற்கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இப் போட்டியில் 17 வயது பெண்கள் மூன்றாம் இடத்துக்கான போட்டியில் அராலி சரஸ்வதி ம. வியும் விக்டோரியா கல்லூரியும் பங்குபற்றும்.

17 வயது பெண்கள் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண கல்லூரியும், வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையும்—

19 வயது பெண்கள் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும் பங்குபற்றும். (க-152)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான போட்டிகள் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன.

17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் இன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் —

15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் நாளை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும்.

# நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் தேவைப்படுகின்றனர்.

நீர்ப்பாசன பொறியியலாளர்கள்

நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்

நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்

நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்.

உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் வியாழன் (16-06-94)

அல்லது

வெள்ளி (17 - 06 - 94)

காலை 10 மணிக்கு

கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

உட்கட்டுமானப் பகுதி,

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

இல, 10, செம்பியன் வீதி,

கொக்குவில்;

[சி-8451]

# திருமண அழைப்பு

அன்பான வேண்டுகோள்:

உற்றார், உறவினர்: நண்பர்கள் வருகை தருக!

மணமக்களை வாழ்த்தி மகிழ்க!

நிகழும் பவ ஆண்டு ஆனி மாதம் 5ஆம் நாள் (19 - 06 - 1994) ஞாயிற்றுக்கிழமை பகல் 10-38 மணி முதல் 11-50 மணி வரையுள்ள சிம்ம லக்கினமும், சுவாதி நட்சத்திரமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எங்கள் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **சிவபாலன்** (விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் இறம்பைக்குளம் ம.மா வி. வவுனியா) அவர்களுக்கும் | எங்கள் ஏகபுத்திரி திருநிறை செல்வி **அநுஷா** (நுண்கலைப் பிரிவு மாணவி) அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு, மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு, தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, மணவிழாவில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்தும், வாழ்த்தியும் ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

● காலச் சூழ்நிலை காரணமாக தனிப்பட்ட அழைப்பு விடுக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திரு. திருமதி சபாபதி மாரிமுத்து, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. | திரு. செல்லத்துரை சிவசுப்பிரமணியம்- திருமதி சி. மகேஸ்வரி, "மகேஸ்வாசம்" ஆலங்குளாய் வீதி, சண்டிலிப்பாய். |

இருவீட்டார் அழைப்பு

# தமிழீழ நிர்வாக சேவை

தமிழீழம்

## வேலை வாய்ப்புக்கள்

கீழ்க் காணும் பதவிக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட திகதியில் இருந்து 1994-06-25ஆம் நாள் வரை பிற்பகல் 5மணி வரை அந்தப் பதவிக்குரிய தகைமைகளை யுடைய பொருத்தமான அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடனும், சுய விவரங்களுடனும், கல்விச் சான்றிதழ்களுடனும், குணநலச் சான்றிதழ்களுடனும் நேர்காணலுக்காக தொடர்பு கொள்ளவும்.

பொதுவான தகைமைகள்:

1. தமிழீழ பிரஜையாக இருக்க வேண்டும்
2. பொருத்தமான கல்வித் தகைமையுடையவராகவும், தேகாரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும்
3. இலங்கை அரச சேவையில் இருந்தவர்கள் சேவையிலிருந்து விலகியவர்களாக இருக்க வேண்டும்.
4. துவிச்சக்கர வண்டி, மோட்டார் வண்டி ஓடக்கூடிய தேகாரோக்கியம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
5. வயதெல்லை 20 — 50 வருடங்கள்

01. திட்டமிடல் பணியாளர்

வெற்றிடம் 02

தகைமைகள்;

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது பொருளியல், புவியியல், புள்ளி விபரவியல் ஏதாவது ஒன்றில் பட்டம் பெற்றவராகவும், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளில் முகாமைத்துவத் தரத்திலான பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது இவைகளுக்கு சமமான தகுதியும், அனுபவமும் இருக்க வேண்டும்.

02. கணக்காளர் பதவி; வெற்றிடம் 02

தகைமைகள்:

பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகு செலவு முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி.

அல்லது

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் திணைக்களக, கூட்டுத்தாபன, நியதிச் சட்ட சபைகளின் கணக்காளராக/உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பதவியில் 5 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் அல்லது இவைகளுக்கு ஒத்த நிறுவனத்தில் 10 வருடக்கணக்காளர் பதவிக்கான அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

வயதெல்லை 30 - 45 வருடங்கள்

03 கணக்காய்வாளர் (வெளிக்கள)

பதவி: வெற்றிடம் - 03

தகைமைகள்:

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி 4 பாடங்களில் சித்தி எய்தியவராக இருக்க வேண்டும். அல்லது க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் தோற்றி வர்த்தகம், கணக்கியல் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன், 06 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்;

04: கணக்குப் பதிவாளர் பதவி:

வெற்றிடம் 02

தகைமைகள்:

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது ஐக்கிய இராச்சிய சர்வதேசக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி கணக்கியலில் C (சித்தி) தரத்திற்கு குறையாமலும், வர்த்தக பாடத்தில் S தரத்திற்கு குறையாமலும் இருக்க வேண்டும். அல்லது இவைகளுக்கு சமமான தகுதியும் முன் அனுபவமும் இருக்க வேண்டும்.

05. எழுதுவினைஞர்கள்;

வெற்றிடம் — 03

தகைமைகள்:

க.பொ.த. சாதாரண பரீட்சையில் அல்லது சி.பா.த.ப. பரீட்சையில் கணிதம், தமிழ்மொழி திறமைச் சித்தி உட்பட 05 பாடங்களில் ஒரே தடவையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும். அல்லது க.பொ.த. சாதாரண பரீட்சை சித்தியுடன், திணைக்களம், கூட்டுத்தாபனம் சட்ட நிதியச் சபைகளில் 5 வருடங்களுக்கு குறையாத அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

அல்லது

தேசியக் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் கணிதம், முதல் மொழி, சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் பி (தர) திறமைச் சித்தி உட்பட 05 பாடங்களில் பி (தர) திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி அல்லது திணைக்களம், கூட்டுத்தாபனம் நியதிச்சட்ட சபைகளில் 10 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

06. தொழில் நுட்ப உத்தியோகத்தர்

வெற்றிடம் - 03

தகைமைகள்:

அ. க. பொ. த. (சாதாரண தர)ப் பரீட்சையில் அல்லது சி. பா. த. ப. பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களில் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றவராக இருக்க வேண்டும். அல்லது,

ஆ. க. பொ. த. (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் முதல் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் பி (தர) திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றில் குறிப்பிட்ட பாட நெறியில் சித்தியடைந்தவராகவும், மேற்படி துறையில் 5 ஆண்டுகளுக்கு குறையாத முன் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை ஒன்றுடன் கீழ் குறிப்பிடப்படும் தொழில் நுட்ப சான்றிதழ்களில் ஒன்றும் பெற்றவராக இருத்தல் வேண்டும்:

1. தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா சான்றிதழ்.
2. கனிஷ்ட தொழில் நுட்ப அலுவலர்க்கான சான்றிதழ்;
3. இவைகளை ஒத்த அல்லது அதற்கு மேலான சான்றிதழ்.

07. பிரதேச (ஒருங்கிணைப்பு) நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர்கள்

பதவி வெற்றிடம்: 08

தகைமைகள்:

க.பொ.த. (சாதாரண தர) ப் பரீட்சையில் தோற்றி கணிதம், தமிழ், புவியியல் உட்பட நான்கு (04) திறமைச் சித்தியெய்தி இருக்க வேண்டும். அத்துடன் சமூக சேவை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் சமூக மேம்பாட்டு திட்டங்களை நடைமுறைப் படுத்திய 05 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் இருக்க வேண்டும்.

08. சமூக சேவை இணைப்பாளர்

பதவி: வெற்றிடம்- 01

தகைமைகள்:

க. பொ. த. (உயர் தர) ப் பரீட்சையில் தோற்றி பொருளியல் உட்பட (03) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் சமூக சேவை நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தராக கடமையாற்றி 05 பாடங்களுக்கு குறையாத முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். அல்லது மேற்படி தகுதிக்கு குறையாமலும், அதற்கு சமமான தகைமையுடைய சமூக மேம்பாட்டு வெளிக்கள அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

09 சுகாதார சேவைகள் இணைப்பாளர் பதவி வெற்றிடம்- 01

தகைமைகள்:

க. பொ. த. (சாதாரண தர) ப் பரீட்சையில் தமிழ், கணிதம், சுகாதாரம், விஞ்ஞானம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களுக்கு குறையாது சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், சமூக சேவையில் ஆர்வம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

10 தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் பதவி வெற்றிடம்- 04

தகைமைகள்:

க. பொ. த. (சாதாரண தர) ப் பரீட்சையில் தோற்றி தமிழ், கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்; அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து சுற்றுத் தேர்ந்த சான்றிதழ்களைப் பெற்றிருப்பதுடன் 2 வருடங்கள் முன் அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

பொறுப்பாளர்,

**தமிழீழ நிர்வாக சேவை,**

கொழும்புத்துறை வீதி,

பாண்டியன்தாழ்வு,

தமிழீழம்.

[இ-8503]

# ஒறேற்றர் சுப்பிரமணியம்

ஞாபகார்த்தமாக

சுன்னாகம் சரா சேது விப ஒபிற நிறுவனங்கள் நடத்தும் துடுப்பெடுத்தாட்ட

## இறுதிப் போட்டிகள் - 1994

(முதலாம், மூன்றாம் இடங்கள்)

காலம்: 19 - 06 - 1994 ஞாயிறு

நேரம்: பி. ப. 1-00 மணி

இடம்: சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி

பங்கு கொள்ளும் கழகங்கள்:

மானிப்பாய் பரீஸ் எதிர் ஜொனியன்ஸ்

கொக்குவில் சி. சி. சி; எதிர் கிறாஸ் கொப்பர்ஸ்

இந்த சுற்றுப் போட்டியில் பங்குகொண்ட கழகங்களையும், இரசிகர்களையும் மற்றும் அமரரின் அபிமானிகளையும், வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புகள் கொடுக்க முடியாததையிட்டு வருந்துகின்றோம். தயவு செய்து இந்த அழைப்பை அனைவரும் ஏற்கவும்

- சேது. விபுலானந்தா அமைப்பாளர்.

(சி/8500)

# நினைவஞ்சலி





| பெரியதம்பி கந்தையா | கந்தையா செல்லமுத்து |
|---|---|
| 10-06-1907 | 22-08-1917 |
| 16-06-1986 | 28-05-1985 |

(சிவலிங்கப்புளியடி)

P. K. பாலசிங்கம்,

சகோதர, சகோதரிகள்

"விநாயக சங்கரிய வளவு",

718, கே. கே. எஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

(இ-8283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அரசியல் வங்குரோத்து

கடந்த சில நாட்களாக, ஸ்ரீலங்காப் படையினர் மீண்டும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வருவது குறித்து, நற்சமூக நடுநிலைய இயக்குநர் வண. கலாநிதி எஸ். ஜே. இம்மானுவல், ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு கண்டனக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தேர்தல் காலம் நெருங்கிக் கொண்டிருந்த போதிலும், ஜனாதிபதி தமிழர்கள் கொல்லப்படுவது குறித்து கவலை கொள்வார் என்றோ, அதனை நிறுத்துவதில் அக்கறை செலுத்துவார் என்றோ எதிர்பார்ப்பதற்கில்லை.

ஜனாதிபதி தேர்தலில் தாமே வெற்றியீட்டி மீண்டும் பதவிக்கு வரவேண்டும் என்பது அவரது ஆசையாக உள்ளது. ஆதற்காகத் தமிழர்களின் வாக்குகளும் தேவை என்பதை இப்போது ஓரளவு புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் வட பகுதித் தமிழ் மக்களின் வாக்குகளில் அவர் கண் வைத்ததாகத் தெரியவில்லை. அதனாலேயே இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டாதிருக்கிறார்.

வடக்கு மக்களின் வாக்குகளைப் பெறவேண்டும் என்பதில் விருப்பம் இருப்பின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அரசியல் தீர்வுதான் சரியான மார்க்கம் என்பதை அவர் இதுவரை திட்டவட்டமாக முடிவு செய்திருக்க வேண்டும். அதனை வெளிப்படுத்தும் விதத்தில் இதுவரையில் யுத்த நிறுத்தத்தைச் செயற்படுத்தி வடக்கு-கிழக்கில் சமாதானத்துக்கும், அமைதிக்குமான ஆரம்பச் சூழ்நிலையை உருவாக்கி இருக்க வேண்டும்.

ஆனால் அது சம்பந்தமான முடிவு எதனையும் எடுக்க முடியாத அரசியல் வங்குரோத்துடன், மிகப் பெரிய பிரச்சினையான இனப்பிரச்சினையை பின்தள்ளிவிட்டு, தெற்கு மக்களின் மனதைப் பறிக்கும், மனதை மாற்றும் கவர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதிலேயே தமது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார்.

நற்சமூக நடுநிலைய இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதுபோல, முகாம்களில் இருந்து எறிகணை வீசி மக்களைக் கொன்றும், காயப்படுத்தியும், இம்சைப்படுத்தியும் பயமுறுத்துவதனால், ஜனாதிபதி இந்த நாட்டை ஆள்வது என்ற தமது எண்ணத்தில் எதிர்மாறான விளைவையே உண்டாக்கப் போகிறார் என்பதே உண்மை. ஆனால் போதியளவு அரசியல் அனுபவமும் முதிர்ச்சியும் இல்லாததால், அவர் இதனைப் புரிந்து கொள்ளும் பக்குவத்தில் இல்லை!

அந்தப் பக்குவத்தை எட்டாமையினாலேயே தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல என்ற முடிவை எடுக்கத் துணியத் தயங்குகிறார். மேலும் யுத்தத்தை நிறுத்துவதற்கு இராணுவத்தினர் பின்னடிப்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். யுத்தத்தைக் காரணமாக வைத்துப் பணம் தேடும் புள்ளிகள் அரசியல் தீர்வையோ, யுத்தநிறுத்தத்தையோ விரும்பவில்லை; அரசியல்வாதிகளில் பலரும் யுத்தத்தினால் பணம் சம்பாதிக்கும் கூட்டத்தில் இருக்கின்றனர்.

ஆகையால் அரசாங்கத்தை தெற்கு மக்கள் தோற்கடித்தால் அன்றி, வடக்கு-கிழக்கு யுத்தமும், அரச பயங்கரவாதமும், மக்கள் படுகொலைகளும் நிறுத்தப்படும் என்று எண்ணத் தோன்றவில்லை.

இனப்பிரச்சினைக்கான தனது தீர்வு என்ன என்பதனை ஆராய்வதிலோ அதை முன்வைப்பதிலோ ஆளும் கட்சி இன்னும் அக்கறை கொள்ளாதிருப்பது ஒன்றே அதற்குப் போதிய சான்றாகும்.

தேர்தல் மிக நெருங்கிவரும் காலத்தில் அதனை நாடிய தற்காலிக தீர்வு எதனையும் அறிவித்து இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக வேடம் போடுவதற்கே விஜேதுங்கா காத்திருக்கிறார். அந்த நிலையில் நின்றே அவர் தொண்டமான்—அஷ்ரப் கூட்டுத் திட்டத்தையும் பரிசீலனைக்கு எடுப்பார் என நம்பலாம்!

# கொரிய தகராற்றில் மத்தியஸ்த முயற்சியில் ஜிம்மி கார்ட்டர்

## அமெரிக்காவின் கடும்போக்கு தணியலாம்

நியூயோர்க் ஜூன் 16

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், வட கொரியாவுடனான தகராறில் மத்தியஸ்தம் மேற்கொள்ள முன்வந்திருக்கிறார்.

முதலில் தென்கொரியா சென்றடைந்த கார்ட்டர் அந்த நாட்டு ஜனாதிபதியின் செய்தியுடன் வடகொரியாவுக்கு தற்போது சென்றுள்ளார்;

தென்கொரிய ஜனாதிபதியின் செய்தியை அவர் வடகொரிய ஜனாதிபதியிடம் கையளிப்பதுடன் கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிப்பது தொடர்பான நடவடிக்கைகளிலீடுபடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் வடகொரியா மீது ஆயுத மற்றும் பொருளாதார முற்றுகைகளை விதிக்கும் விஷயத்தில் அமெரிக்காவின் தீவிரம் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''பேச்சுக்களை ஆரம்பித்து பிரச்சினைக்கு தீர்வு காண்போம் தடைகள் விதிப்பது யுத்தத்துக்கு வழி வகுக்கும்'' —என்று வடகொரியா விடுத்த பிரதிய வேண்டுகோளைத் தொடர்ந்து, வடகொரியா மீது ஆயுதத் தடை விதிக்கும் விஷயத்தை அமெரிக்கா ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் உடனடியாக கொண்டு வரமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது;

ஐ.நாவின் பொருளாதார உதவிகளை வடகொரியா பெறுவதற்கு மட்டுமே தடைவிதிக்க வேண்டும் என்று கோரும் பிரேரணையை மட்டுமே ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் அமெரிக்கா சமர்ப்பிக்க விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸியில் இருந்து விலகுவதாக வடகொரியா அறிவித்துள்ளது'

(இ-எ)

# மேல் மாகாணசபை நிர்வாகத்திலிருந்து கொழும்பு மாநகரசபை விடுவிக்கப்படும்

## ஜோன் அமரதுங்கா ஜனாதிபதியிடம் அறிக்கைசமர்ப்பிப்பார்

கொழும்பு, ஜூன் 16

கொழும்பு மாநகர சபையை மேல்மாகாண சபையின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து சுயேச்சையாக இயங்கும் அமைப்பாக மாற்றுவது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது;

கொழும்பு முனிசிப்பல் கோப்பரேஷன் என்ற இந்த அமைப்புக்கு பெயர் சூட்டப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடந்த மாநாடு ஒன்றில் இது பற்றி ஆராயப்பட்டது.

இவ்விஷயம் பற்றி பரிசீலனை செய்து பூரண அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி உள்ளூராட்சி அமைச்சர் ஜோன் அமரதுங்காவை ஜனாதிபதி பணித்திருக்கிறார்.

இந்த மாநாட்டில் கொழும்பு மாநகரசபையின் பதில் மேயர் கே. கணேசலிங்கம் கொழும்பு மாவட்ட எம்.பிக்கள், திறை சேரிப்பதில் செயலாளர் கே. சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கொழுபு மாநகரசபையை சுயேச்சையான கூட்டுத்தாபனமாக்குவது மாகாணசபையின் விவகாரங்களில் தலையிடுவது ஆகாது என்றும்—

கொழும்பு மாநகரசபையைத் தவிர வேறு எந்த மாநகர சபைகளுக்கும் இந்த அந்தஸ்து வழங்கப்படாது என்றும் திரு; கணேசலிங்கம் தெரிவித்தார். (இ-எ)

# மேல்மாகாண சபை: கலைக்க அரசு திட்டம்

## சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 16

மேல் மாகாணசபையைக் கலைத்து விட்டு ஆளுநரின் ஆட்சியை ஏற்படுத்தும் சதி வேலைகள் நடைபெறுவதாக முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இச்சதி பற்றி நாட்டு மக்களுக்கு தெரிவிக்க விரும்புவதாகவும் அவர் ''ஸமிகாதிப'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். (இ-எ-6)

# நீர் விநியோகத்துக்கான எஸ் - லோன் குழாய்கள்

## யாழ். எடுத்துவர அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ். மாநகராட்சி மன்ற கரையோரப் பகுதி நீர் விநியோக விஸ்தரிப்பிற்குத் தேவையான எஸ் - லோன் குழாய் உட்பட நீர் விநியோகத்திற்கு தேவையான உபகரணங்களை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

10 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த இவ் உபகரணங்களை இங்கு எடுத்து வருவதற்கான அனுமதியை யாழ் அரச அதிபர் திரு; கா. மாணிக்கவாசகர் பெற்றுக் கொடுத்துள்ளார். (இ-162)

## தமிழ் மொழி

# கலைத்திறன் போட்டிகள் நாளை ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 16

மாவட்ட நிலையிலான தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகள் 1994 நாளை வெள்ளிக்கிழமை காலை 8-30 மணி முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது. அன்றையதினம் இயல், இசை சார்ந்த 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் பிரிவினருக்கான நிகழ்ச்சிகள் இடம்பெறும். 2ஆம் பிரிவில் வாசிப்பு தவிர்ந்த ஏயனய போட்டிகளில் கோட்டமட்டத்தில் முதலாம் இடம்பெற்ற போட்டியாளர்கள் இப்போட்டிகளில் பங்கு கொள்கின்றனர்;

மறுநாள் சனிக்கிழமை காலை நடனப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் —

நாடகப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளன.

வலய மட்டத்தில் இடம் பெற்ற போட்டிகள் தொடரில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நிகழ்ச்சிகள் மாவட்ட நிலையில் பங்கு கொள்ளத் தகுதி பெற்றுள்ளன. போட்டிகள் நடைபெறும் அன்றைய தினமே சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கோட்ட நிலையில் முதலிடம் பெற்ற நடன நிகழ்ச்சிகளே மாவட்ட நிலையப் போட்டிக்கு அழைக்கப்படுகின்றன என்று வலயம் - I இன் கல்விப்பணிப்பாளர் அறிவித்திருக்கிறார். (எ)

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 16

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் தேசிய மட்டத்திலான தேர்ச்சி சான்றிதழ் (தரம் 3, தரம் 2) பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மின்கம்பி வினைஞர், மரவேலை, கட்டடவேலை, நீர்குழாய் வினைஞர், பொருத்துநர் (பொது), வாகன பொறிவலர் போன்ற சான்றிதழ் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட துறையில் ஒரு வருடகாலம் சம்பந்தப்பட்ட பயிற்சி அனுபவம் இருந்தால் போதுமானது.

இது தொடர்பான மேல விபரங்களை யாழ்ப்பாணத்தில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு க. ஜெயரட்ணத்திடமும், வடமராட்சியில் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பரீட்சகர் திரு; திலகானந்தத்திடமும் அறிந்து கொள்ளலாம்.

இதன் விபரம் அறிவித்தலையும்—

மாதிரி விண்ணப்பப்படிவத்தையும்— யாழ். மின்சார நிலைய வீதியிலுள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் அலுவலகநேரங்களில் பார்வையிடலாம்; (இ-162)

## 1988-89 காலப்பகுதியில்

# காணாமற் போனோருக்கு மரணச் சான்றிதழ்

கொழும்பு, ஜூன் 16

1988 — 89 காலப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களின்போது காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டவர்களில் இதுவரை தேடிக் கண்டு பிடிக்க முடியாமல் இருப்பவர்களை இறந்தவர்களாகக் கருதி மரணச் சான்றிதழ் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

நாத்தாண்டியில் நடந்த ஐ.தே.க. வருடாந்த மாநாட்டில் அவர் மேலும் சொன்னதாவது:-

காணாமற்போனவர்கள் இறந்து விட்டார்கள் என்று அரசாங்க அதிகாரி நம்புவாராயின், அவர்கள் இறந்துவிட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும் மரணச் சான்றிதழ் வழங்கப்படும்.

இம்மரணச் சான்றிதழ்களைப்பெறும் உறவினர்களுக்கு நட்டஈடு மற்றும் இறந்தவர்களின் குடும்பத்துக்குரிய கொடுப்பனவு ஆகியவை வழங்கப்படும்.

இவற்றை அடுத்த சில மாதங்களில் வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். (இ-எ-6)

## புலிகளின் குரல் வானொலியில்

16 – 06 – 1994

வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்;
★ 8-10 — உரை — ''மனிதர்களின் பெறுமதி''
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் ''சுன்னாகம் பால் தொடரும் நிர்மாணவேலைகள்'' தனி நடிப்பு
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து அயர்லாந்து எண்ணூறு ஆண்டு விடுதலைப் போர் என்ற நூலில் இருந்து — ''விவசாயிகளைத் தின்ற ஆடுகள்'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

17 – 06 – 1994

வெள்ளி காலை

★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7-15 — விடுதலை கானங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# மருந்துத் தட்டுப்பாடு நீங்கியது

வடமராட்சி ஜூன் 16

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி ஏற்புத் தடை ஊசி மருந்து, பாம்புக்கடி மருந்து என்பன யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி [illegible] அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-178)

# தமிழீழ போராட்டத்துக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும், திறமைக்கும் ஏற்றவகையில் பல வழிகளில் தமது பங்களிப்பை போராட்டத்துக்கு அவர் வழங்கியுள்ளார்.

எமது இயக்கத்தின் ஆலோசகராக இருந்து கல்வி, பொருண்மிய துறைகளுக்கு பல்வேறு வகையில் காலத்துக்குக் காலம் ஆலோசனைகளை வழங்கினார்.

எமது இயக்கத்துடனும், தலைமையுடனும் நெருங்கிப் பழகினார்.

### கிளாலியால் பயணம் செய்தது ஏன்?

'யாழ்ப்பாணத்தில் உள்ள பிரமுகர்கள் பலரும் கப்பல்களிலும், விமானத்திலும் கொழும்புக்குப் போக நீங்கள் மட்டும் ஏன் மரணப் பொறியான கிளாலி வழியாகப் போகிறீர்கள்?' — என நான் அவரிடம் கேட்டேன்.

'கிளாலிப் பயணம் மக்களின் போராட்டத்தின் ஒரு வடிவம். அரசின் தடையை உடைத்து மக்கள் நடத்தும் போராட்டம் அல்லவா இது? மக்கள் போகிறார்கள்; நானும் அவர்களுடன் சேர்ந்து அவர்கள் போராட்டத்தில் பங்கு கொள்ள விரும்புகின்றேன்.'—என்று சிரித்தபடி பதில் அளித்தார்.

பேராசிரியர் துரைராசா எமது மக்களின் அரசியல் உரிமைக்காக குரல் கொடுத்து வந்துள்ளார்.

தலைவர் அவரை கௌரவித்து வழங்கிய விருந்தில் பேசிய அவர் 'எமது மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் — தன்னாட்சி உரிமையுடன் வாழ வேண்டும்; தேசிய இனமான எமது இனம் ஆளும் அதிகாரம் கொண்ட இனம்' என்று கூறினார்.

போராட்டத்தின் நியாயத்தையும், போராட்டம் தொடங்கியதன் காரணத்தையும் முழுமையாக ஏற்ற அவர், எமது போராட்டம் நியாயமானது என்று கூறி எமது இயக்கத்துக்கு தனது முழு ஆதரவையும் நல்கி வந்தார்.

போராட்டத்தின் இன்றைய பரிமாணத்துக்கு அவர் முக்கிய பங்கை அளித்ததுடன் பொருண்மியத்தில் பல திட்டங்கள் வெற்றி பெற உதவினார்.

கல்வி சம்பந்தமாக எடுக்கும் முடிவுகளுக்கு ஆலோசனை கூறி வந்தார். அவர் தலைவருடன் நெருக்கமாகப் பழகினார்.

தனது கடமையுடன் கல்விக்கு நாப்பரணாக விளங்கிய அவர் மக்கள் விடுதலைக்கும் போராட்டத்தின் வெற்றிக்கும் பல வழிகளிலும் உதவினார்.

பல வழிகளில் எமது போராட்டத்துக்கு அவர் முண்டு கொடுத்து நின்றார். அவை பற்றிய விடயங்களை ஒரு காலத்தில் வெளியிடுவோம்.

எளிமையுடன் சரியாக கணிக்கும் திறமையுடன் விளங்கிய அவர் சாதாரண மக்களில் ஒருவராக இருந்தார்.

போராட்டத்தின் சுமையை மக்களுடன் இணைந்து தானும் சுமக்க விரும்பினார்.

மனிதாபிமானம், மனித நேயம், மனிதப்பற்று ஆகிய பற்றால் அவர் மனிதனாகியுள்ளார்.

மனித குலத்தின் மரபு, பண்பாடு ஆகியவற்றை அடையாளம் கண்டு அவற்றின் திருவுருவமாக விளங்கினார். அந்தப் புனிதர் இப்போது இங்கு உறங்கிக்கொண்டிருக்கிறார்.

காலத்தால் அவர் சாகவில்லை. சரித்திரமாகி விட்டார். சகலரின் நெஞ்சங்களிலும் அவர் நிலைத்திருப்பார்- என்று கூறினார். (உ-3)

# திஸ்ஸ பாலசூரியரின் மரியாள் பற்றிய நூல்

## கத்தோலிக்க திருச்சபை எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 16

''மரியாள் மற்றும் மனித விடுதலை'' என்ற தலைப்பில் வண. பிதா திஸ்ஸ பாலசூரியா எழுதிய புத்தகம் கத்தோலிக்கர்களின் நம்பிக்கைக்கு கேடு விளைவிப்பதாக இருக்கிறது.

இப்படி இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு தெரிவித்துள்ளது,

மாநாட்டின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் பிஷப் ஒஸ்வால்ட் கோமிஸ் விடுத்த அறிக்கை ஒன்றில், இந்த நூலை கத்தோலிக்கர் வாசிக்கக் கூடாது என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த நூலில் யேசு பிரானுக்கும் மரியாளுக்கும் புதிய வியாக்கியானம் ஒன்றை வழங்க நூலாசிரியர் முயற்சித்துள்ளார் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

யேசுபிரான் மற்றும் அன்னை மரியாள் பற்றி புதிய வியாக்கியானம் கொடுக்கும் முயற்சியில் நூலாசிரியர் வண. பிதா; திஸ்ஸ பாலசூரியா ஈடுபட்டுள்ளார்.

சமூக அநீதிகளின் தழும்புகளைக் கொண்ட எமது பல சமய சூழ்நிலைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக பயபக்தியுடைய இவ்விருவரையும் மாற்ற வேண்டும் என்ற நம்பிக்கையை அவர் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது.

பொறுப்பான மேய்ப்பாளர்கள் என்ற முறையில் அவர் தெரிவித்த வியாக்கியானம் திருச்சபையின் விசுவாசத்துக்கு ஏற்றதாக இல்லை என்பதை நாங்கள் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்;

எமது மக்களின் விசுவாசத்துக்கு நிச்சயமாக ஊறு விளைவிக்கக் கூடிய பாரதூரமான குறைபாடுகளை இந்த நூல் கொண்டுள்ளது - இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

# ஷெல் தாக்குதலை கண்டித்து ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

மண்டைதீவு, காரைநகர், பலாலி ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள அரச படைகளின் காட்டு மிராண்டித்தனமான, கண்மூடித்தனமான பீரங்கி, ஷெல் தாக்குதல்களால் நாம் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளோம்;

நற்சமூக நடுநிலைய இயக்குநர் வண. டாக்டர் எஸ். ஜே. இமானுவல் ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேயதுங்காவுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கொடிய செயல்களால் இறந்தவர்களையும் காயமுற்றவர்களையும் கண்ணுற்ற நாம் இது அரச படைகளின் மிருகத்தனமான காட்டு மிராண்டித்தனமான செயல் என்று கண்டிக்கிறோம். இவற்றுக்கு நீங்களும் உங்கள் அரசாங்கமும் மனித குலத்துக்குக் கணக்குக் காட்டியே தீர நேரிடும்.

படைகளின் இக்கொடிய செயல்களை நிறுத்தும்படி நாம் உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (a-162)

## ஆலயங்களில்

தென்புலோலி மந்திகை அம்மன் கோவில் ஏகதின இலட்சார்ச்சனையும் விசேட ஹோமமும் இன்று 16 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (ஏ-178)

★ ★ ★

அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயத்தில் இன்று முதல் 25 ஆம் திகதி வரை இலட்சார்ச்சனை நடைபெறும். (உ-17)

### மக்கள் அலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தனர்.

இறுதிக் கிரியைகள் மு,ப. 10.45 மணிக்கு முடிவடைந்தன. அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் க. குணரத்தினம் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது; இரங்கலுரைகள் முடிவுற்றதும் —

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ''பான்ட்'' வாத்தியக் கோஷ்டி முன் செல்லவும், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் மற்றும் ஹாட்லி கல்லூரி மாணவர்களின் 'பான்ட்' வாத்தியக் கோஷ்டிகள் பின் செல்லவும் இறுதி ஊர்வலம் ஆரம்பமானது.

''பான்ட்'' வாத்தியக் கோஷ்டிகளின் பின்னே மிக நீண்ட ஊர்வலம் அணி சென்றது. சுமார் ஒன்றரை மைல் நீள மக்கள் அலை திரண்டு சென்ற பேராசிரியரின் பூதவுடல் அதன் மேல் மிதந்து செல்வது போலத் தெரிந்தது. குடா நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்த ஆயிரக்கணக்கானோர் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

பூதவுடல் வைக்கப்பட்டிருந்த பேழை திறந்திருந்தமையால் வழி நெடுகிலும் பொது மக்கள் பேராசானுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

பேராசானின் பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த போது குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் வந்த பல மட்டங்களையும், பல துறைகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

விடுதலைப் புலிகள் உயர் மட்டப் பிரமுகர்களான அன்ரன் பாலசிங்கம், கரிகாலன், வே. இளங்குமரன், பொட்டு அம்மான், இளம்பரிதி, அரசண்ணா, புதுவை இரத்தினதுரை உட்பட போராளிகள் பலரும் பேராசானின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

(அ-3-9-173-155)

வன [illegible] ேணிட
கவனம் செலுத்துவோம்

பெறுவதில்லை இனிச் சீதனம என்று
புது [illegible] ஒன்று படைத்திடுவீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்**

## பதவி வெற்றிடம்

பதவி: கணக்காளர் - 104 / 08

சம்பளத்திட்டம்;

1005 — 1705
40X5 — 50X10

(அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

வயதெல்லை: 23 — 45 வருடங்கள்

கல்வி மற்றும் தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தின் கணக்குப் பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் [பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்] அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத்திட்டத்தின் கணக்குப் பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையிலான மேற்பார்வை மட்டத்தில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்] அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலை பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்காய்வுத் துறையிலான மேற்பார்வை மட்ட பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) / க. பொ. த. உயர் தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் / எண்பார்வை மேற்பார்வை மட்டத்துறையில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், பி எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 24-06-94ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

— பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம். (இ/8470)

## மரண அறிவித்தல்கள்

அருட்சகோதரி

### பூலோலி கபிரியேல்பிள்ளை

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட, திருக்குடும்ப சபையின் முதல் சுதேச மாகாணத் தலைவியான சகோதரி பூலோலி கபிரியேல்பிள்ளை, 15-6-94, புதன்கிழமை பாஷையூர், திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் காலமானார்.

அன்னாரது பூதவுடல் இன்று, வியாழக்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும். பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயரினால் பலி நிறைவேற்றப்பட்டு, புனித மரியன்னை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

தகவல்:
திருக்குடும்ப மாகாணத்தலைவி

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (31438)

### திருமதி நடராசா புஷ்பராணி

திருமதி நடராசா புஷ்பராணி காலமாகிவிட்டார்.

இவர் ஒய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும் இணுவலை, சிறுவிளானைச் சேர்ந்தவருமான செல்லப்பா நடராசாவின் அன்பு மனைவியும், ஈச்சமோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும், சிறிஸ்கந்தராசா (லண்டன்), சிறிரங்கராசா (கனடா), சிறிசந்திரகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராசா, சிவானந்தராசா, காலஞ்சென்ற மனோகரராசா, இந்திரா சிவலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற துரைராசா, காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சுப்பிரமணியம், நமசிவாயம், மங்கையர்க்கரசி, இராசமணி, மகேஸ்வரி, இரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (16-6 94) வியாழக்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு உரும்பிராய் சிவகுல வீதி சிவசுப்பிரமணியத்தின் (பாலா) இல்லத்தில் நடைபெற்று உரும்பிராய் வேம்பன் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. நடராசா
(கணவர்)

சிவகுல வீதி,
உரும்பிராய். (31435)

### கந்தையா சுப்பிரமணியம்

(மணியண்ணை)

(பிரபல வெற்றிலை வியாபாரி திருநெல்வேலி)

கந்தையா சுப்பிரமணியம் நேற்று மாலை 6 மணியளவில் காலமாகிவிட்டார்.

இவர் மகாலெட்சுமியின் அன்புக் கணவரும், திருச்செல்வி (முன்னாள் செல்சாலை ஆசிரியை ஜேர்மனி), முத்துலிங்கம் (ஜேர்மனி), மகேசன் (ஜேர்மனி) கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமேஸ்வரன் (வியாபாரி திருநெல்வேலி), தர்மபுத்திரன் (ஜேர்மனி), கலாராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி (ஆரம்ப பாடசாலை இந்து மகளிர் கல்லூரி)யின் அன்பும் பாசமும் நிறைந்த பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சு. மகாலட்சுமி
(மனைவி)

இராமநாதன் கட்டி,
கோண்டாவில் றோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (31439)

# புலிகளுக்கு எதிராக யுத்தம் நடத்த ஒருமுகப்படுத்திய கட்டளைப்பீடம்!

## அமைக்கும்படி முப்படைத் தளபதிகள் கூட்டாக கோரிக்கை

கொழும்பு, ஜூன் 16

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் நடத்துவதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட கட்டளைப்பீடம் ஒன்றை அமைக்கும்படி முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ் மா அதிபரும் கூட்டாக பாதுகாப்பு அமைச்சில் உள்ள அதி உயர் அதிகாரி ஒருவரைக் கேட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் பற்றி ஆராய்ந்த மாதாந்த அதிஉயர்நிலை கூட்டத்தில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பயனளிக்கக் கூடிய முறையில் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிடுவதற்கு தேவையான அதிகாரங்களுடன் கூடிய வகையில் இந்த ஒரு முகப்படுத்தப்பட்ட கட்டளைப் பீடம் அமைக்கப்பட வேண்டும் என்றும் முப்படைகளின் தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கை முன்னர் விடுக்கப்பட்டிருந்தும் — எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் கூறினார்கள் இதனால் தாங்கள் குழப்பமடைந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

யுத்த நடவடிக்கைகளை திட்டமிடவும், செயற்படுத்தவும், பொறுப்புக்களை ஏற்கவும் ஒரு முகப்படுத்தப்பட்ட கட்டளைப் பீடம் இருக்க வேண்டும் என்று புலனாய்வுப் பிரிவு, பரா இராணுவம் உட்பட பாதுகாப்புப் படைகளின் சிரேஷ்ட உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் விடயங்களைப் புதிதாக நியமிக்கப்படவிருக்கும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரிடம் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் இவர்கள் தங்கள் சகாக்களிடம் தெரிவித்தனர் என்று அறியவருகிறது.

பாதுகாப்புப் படையினரையும் பொலிஸாரையும் சிவிலியன் அல்லது ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவரின் கீழ் இயங்க வைப்பது, விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிடும் நல்வழியாகாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சில அதிகாரிகள் முறையாக அரசாங்கத்திற்கு விவரங்களைத் தெரிவிக்கவில்லை என்றும் இவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-எ)

### இன்று

தென்மராட்சிக் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கிடையிலான மாதாந்த கலந்துரையாடல் ஒன்று, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இடம்பெறும். எனவே தென்மராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து உற்பத்திக் குழு உறுப்பினர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது. (எ)

### நாளை

யாழ்ப்பாணம் ஜூன் 16

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும். சகல அதிபர்களும் தவறாது சமூகம் தருமபடி கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் பண்டிதர் க. முத்துவேலு "தோன்றாத் துணை" எனும் பொருளில் சொற்பொழிவை நிகழ்த்துவார். திரு க. மாணிக்கவாசகம் அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

### பாடசாலைகளில்

சங்கானை இறுப்பிட்டி விக்னேஸ்வரா வித்தியாசாலை இல்ல மெய்வல்லுனர்போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பிள்ளையார் கோயில் மைதானத்தில் அதிபர் திரு. இ. இராசேந்திரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஜெ. இருதயநாதன் கலந்து கொள்வார். (க-89)

★ ★ ★

பளை மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் வித்தியாலய மைதானத்தில் அதிபர் க. புண்ணியசீலன் தலைமையில் நடைபெறும்.

இப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக பளை பிராந்திய கல்வி அதிகாரி ப. அரியரத்தினமும் சிறப்பு விருந்தினராக பளை பிரதேச செயலர் க. ஐயாத்துரையும் கலந்து கொள்வர். (க-117)

★ ★ ★

பளை மகாவித்தியாலய சிரேஷ்ட பிரிவு இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று 16ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1-30மணிக்கு அதிபர் திரு. க. புண்ணியசீலன் தலைமையிலும் கனிஷ்ட பிரிவு இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-30மணிக்கு அதிபர் திருமதி இ. ஜே. தில்லைநாயகம் தலைமையிலும் நடைபெறும். (க)

### தமது கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது? அவர்களுடன் நிபந்தனையின்றிப் பேச நீங்கள் தயாரா?" — என்று கேட்டேன்.

"ஆம். அதற்கு நாங்கள் தயார். அதனை அவர்களிடம் சொல்லுங்கள்" — என்று சந்திரிகா திடமாகப் பதிலளித்தார்.

"நாம் ஆட்சிக்கு வந்ததும் புலிகளுடன் பேசுவோம்.

"தற்போதைய மாகாண சபை முறை பயனற்றது. நாம் சகல மாகாணசபைகளையும் அந்த ஆட்சி முறையையும் கலைத்து விடுவோம்.

"சமஷ்டி" என்ற சொல் கடந்த காலத்தில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு விட்டது. எனவே அந்த சொல்லைத் தவிர்த்து அர்த்தமுள்ள வகையில் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வோம்.

"நாட்டை ஐந்து அலகுகளாக வகுத்து அவற்றுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கலாம்.

'வடபகுதியையும் கிழக்கின் தமிழ்ப் பகுதிகளையும் ஒரே அலகின் கீழ் கொண்டு வந்து அவற்றுக்கு உரிய அதிகாரங்களை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியதாக இருக்கும் — இப்படி சந்திரிகா என்னிடம் கூறினார்.

சந்திரிகாவின் அழைப்பை புலிகள் ஏற்பதாக அறிவித்தால் இப்போதே இரு தரப்பும் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும். அதன் மூலம் ஸ்ரீலங்கா அரசுக்கு சரியான ஓர் அடியை புலிகள் கொடுக்க முடியும்.

நாட்டில் உள்ள பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்என்றே தமிழர்களும் சிங்களவர்களும் விரும்புகிறார்கள். இதற்காக தமிழர்களுடன் —விடுதலைப் புலிகளுடன்— பேச்சு நடத்தப்படுவதை சிங்கள மக்கள் விரும்புகிறார்கள். ஆனால் அரசாங்கம்தான் அதனைச் செய்யாமல் தவிர்த்து வருகிறது.

எனவே ஆளும் ஐ தே.கவை ஒதுக்கிவிட்டு புலிகளும் பிரதான எதிர்க்கட்சிகளும் ஒன்று கூடிப் பேசலாம்.

எந்த நாட்டிலும் உள்ள பிணக்குகளுக்கு பேச்சு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே இன்றைய சர்வதேச ஒழுங்குகள் - அனுபவங்கள் - காட்டுகின்றன.

இதனைப் புரிந்து கொண்டு நாம் செயலாற்ற வேண்டும். — என்றார்.

### வீதியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிக்கொண்டு கதறு வென சென்றனர்.

பொலிஸ் உதவி அதிபர் தர்மசேன அந்த இடத்துக்கு வந்து இச்சம்பவம் பற்றி விசாரிப்பதாக எம்.பியிடம் கூறினார். ஆனால் எம். பியோ அந்த உறுதி மொழியை எழுத்தில் தரும்படி கேட்டார். அதனை ஏற்று உதவிப் பொலிஸ் அதிபர் உறுதி மொழியை எழுத்தில் கொடுத்தார்.

அதன் பின்னர் எம். பி. தமது மறியல் போராட்டத்தைக் கைவிட்டார்.

எனினும் — அதன் பின்னர் சில நபர்கள் தங்கள் முகங்களை கறுப்பு சீலையால் மறைத்தபடி "பஜேரோ"க்களில் வந்து பொலன்றுவை நகரில் காணப்பட்ட சுதந்திரக்கட்சிக் கொடிகளையும் பதாகைகளையும் அறுத்தெறிந்து விட்டுச்சென்றதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (ஒ எ)

### பல்கலைக்கழக வரலாற்றில்

## துரைராசவின் காலம் மறுமலர்ச்சிக் காலம்

பேராசிரியர் மிக நெருக்கடியான காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவி ஏற்றார். அவரது காலம் பல்கலைக்கழக வரலாற்றிலேயே மறுமலர்ச்சிக் காலமாகும்.

நேற்று இங்கு நடைபெற்ற இரங்கல் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க குணரத்தினம் இவ்வாறு குறிப்பிட்டார்.

நோய் வாய்ப்பட்டிருந்த போதும், தனது நோயைப் பற்றிச் சிந்திக்காது யாழ். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி பற்றியே அவர் சிந்தித்தார்—

கடந்த மாதம் கொழும்புக்கு சென்றிருந்த சமயம் அவரை அவரது இல்லத்தில் சந்தித்தேன். அச்சமயம் தமது நோயைப்பற்றிப் பேசவில்லை பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி பற்றியே என்னுடன் பேசினார் — என்றும் துணைவேந்தர் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சார்பில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், நிர்வாக அதிகாரிகள் சார்பில் திரு இ. முருகையன், ஊழியர்கள் சார்பில் திரு. இரத்தினசபாபதி, மாணவர் சார்பில் செல்வகுமார், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு அனந்தராஜ், ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. நடராசா, பழைய மாணவர் சார்பில் திரு. விக்கினேஸ்வரன், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சார்பில் திரு. பிரதீபன், உறவினர்கள் சார்பில் திரு சரவணமுத்து, விடுதலைப் புலிகள் சார்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர்.

திறந்த பல்கலைக்கழகத் துணைவேந்தரின் இரங்கல் செய்தியை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் திரு. ஞானேந்திரன் வாசித்தார்.

### ஜனாதிபதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமையகத்தில் வைத்து பி. பி. ஸிக்கு பேட்டியளித்த திரு. பாலசிங்கம்—

ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களுக்கு சம்பந்தமில்லாதது என்றார்.

உள்நாட்டுப் போருக்கு அரசியல் தீர்வு ஏற்படும் வரை வடக்கிலும் கிழக்கிலும் தேர்தல் எதுவும் நடத்தப்படுவதைப் புலிகள் எதிர்ப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

எந்த நிபந்தனையும் இன்றி பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப் புலிகள் இயக்கம் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாலசிங்கத்தின் கூற்றுப்படி விடுதலைப் புலிகள் பேச்சுகளை விரும்புவதாகத் தெரிகிறது.

பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனைகளாக விதிக்கப்பட்ட போர் நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் ஆகியவற்றை தாங்கள் இப்போது கைவிட்டு விட்டதாகவும்—

ஆனால் அரசிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றும் பாலசிங்கம் மேலும் குறிப்பிட்டார்.

அரசு அரசியல் ரீதியான முயற்சிகளைத் தொடங்க வேண்டும்.

அரசு தெற்கில் தேர்தல் ஆயத்தங்களைச் செய்து வருகிறது; அதேவேளையில் வடக்கில் யுத்தம் நடத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்வதில் ஈடுபட்டுள்ளது. இராணுவத் தீர்வையே நம்பி அரசு போர் முன்னெடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது — என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் யாழ். குடாநாட்டின் சிவில் நிர்வாகத்தைப் படிப்படியாகத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதைச் சுட்டிக்காட்டி அவர் எச்சரிக்கையும் விடுத்தார்.

ஏற்கனவே நீதிமன்றமும் காவல்துறையும் விடுதலைப் புலிகளால் நடத்தப்படுவதையும்—

விடுதலைப் புலிகள் அண்மையில் வங்கி திறந்திருப்பதையும் அவர் குறிப்பிட்டார்

எனவே விடுதலைப் புலிகள் இயக்கம் சமஷ்டி அமைப்பின்கீழ் அரசு பற்றி கலந்துரையாடத் தயாராக இருக்கிறது என்றாலும்—

இந்தத் தராது காலவரையறை இன்றி நீடித்தால், அது இறுதியில் நடைமுறையில் தனித் தமிழ் நாடு ஒன்று உருவாக வழி வகுக்கும் என்றும் பாலசிங்கம் தெரிவித்தார். (க-ஒ-எ-6)

### எழுதுநர் பரீட்சை 21 தமிழர் சித்தி

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் நடைபெற்ற பொதுச் சேவை எழுதுநர் தரம்-1க்கான பதவி உயர்வுப் போட்டிப் பரீட்சையில் தமிழ் மொழியில் தோற்றிய உள்ளூராட்சி எழுதுநர் சேவையைச் சேர்ந்த மூவர் உட்பட 21 தமிழர்கள் சித்தியடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-17)

### பேச்சு நடத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூரே குறிப்பிட்டார்.

அரசு நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளது.

இந்த நான்கு நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச அரசு தயாராக இருப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸா எங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அந்த நிபந்தனைகள் வருமாறு:-

★ பேச்சு தொடங்க முன் அனைத்து வன்செயல்களையும் புலிகள் நிறுத்த வேண்டும்.

★ பேச்சு நடத்த உத்தேசிக்கும் விடயங்களை நேரத்துடனேயே அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

★ பதிவு செய்யப்பட்ட அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டும்.

★ விடுதலைப் புலிகள் தரப்பில் அதன் தலைவர் திரு. பிரபாகரனே பேச்சுக்களில் நேரடியாக பங்குபற்ற வேண்டும்.

— இவ்வாறு இவான்ஸ் கூரே தெரிவித்தார் என்று பி.பி.ஸி சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### ஜெகநாதர் மாணிக்கர்

மாதகலைப் பிறப்பிடமாகவும் தற்சமயம் நீர்வேலியில் வசித்தவருமாகிய ஜெகநாதர் மாணிக்கர் நேற்றுக் 15-6-94 காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தங்கராசா ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், பரமேஸ்வரி, நேசமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மராஜா, ரஞ்சனராஜா (சுவிஸ்), சசிதா, ரவீந்திரன் (சுவிஸ்), ஜெயரஞ்சனி, குமுதினி, பிரபாகரன், குமார், தர்சினி ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 16-6-94 நண்பகல் 1 மணியளவில் நீர்வேலியில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
தர்மன்
(பேரன்)

(31443)

### இராசமணி சபாரத்தினம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், இல 9/6 புது வீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய இராசமணி சபாரத்தினம் 15 - 06 - 1994 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. வே. சபாரத்தினம் (பிரபல வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், இந்திராணி, காலஞ்சென்ற தவராசா, தயாமணி (கொழும்பு), அன்னராணி (மாநகர சபை, யாழ்), காலஞ்சென்ற புஸ்பராணி, யோகராணி (கனடா), புஸ்பராசா (துரை கொழும்பு), நந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பேரம்பலம் (சவூதி), சோமலிங்கம், சிதம்பரநாதன் (கொழும்பு), சந்திரராஜன் (கனடா), ஜெயலதா (கொழும்பு), ஜானகி (கனடா) ஆகியோரின் மாமியாரும், சாருகேசி (கனடா), தயாளன் (நோர்வே), பவகேசி, கோடீஸ்வரன் (யா. மா. ந. சபை), உதயகுமார், உதயகேசி தர்சனா, வதனி, கார்த்திகா, சிந்துஜா, சாலினி, காயத்திரி, ரசிகிரி, கோகிராஜ், ஆனந்தராசா, வசந்தன் ஆகியோரின் பேர்த்தியும் இளங்கோ, பார்த்திபன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (16-06-1994) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் தண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:
சபாரத்தினம்
(கணவன்)

[31440]

### சரவணமுத்து சுந்தரமூர்த்தி

சரவணமுத்து சுந்தரமூர்த்தி 15 - 6 - 94 இல் தொல்புரத்தில் காலமானார். இவர் காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாக கொண்டவரும் காலஞ்சென்ற திரு திருமதி சரவணமுத்துவின் புதல்வரும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், சுந்தராம்பாள், குணரத்தினம், சுசிலாம்பாள், சிவாரட்ணம் ஆகியோரின் அருமைத் தந்தையும், சண்முகலிங்கம், திருமகள் ஆகியோரின் மாமனாரும், சாதனா, சுபாஜினி ஆகியோரின் பேரனும், அன்னபாக்கியம் (ஓமந்தை), இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கத்தின் மருமகனும், சிவஞானம், பாக்கியம், செல்லம்மா, பார்வதி, சரஸ்வதி (மக்கள் வங்கி ஸ்ரான்லிக்கிளை யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-6-94) வியாழக்கிழமை 12 மணிக்கு நடைபெற்று அவரது இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

தகவல்:
திருமதி நல்லம்மா சுந்தரமூர்த்தி
(மனைவி)

க. ராதா,
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (31441)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் ... அச்சகத்தில் 16-06-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org